TAMIL MURASU

6 OCT 2022

PAGE 2

## புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுகலை படிப்புக்கான சேர்க்கைக்கு 15ம்தேதி வரை விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, அக். 6- புதுவை பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

2022-23ம் கல்வி ஆண்டுக்கு புதுவை பல்கலைக் கழகத்தில் உள்ள பல்வேறு முதுகலை மற்றும் பிஜி டிப்ளமோ படிப்புகளுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான வெப் போர்ட்டல் திறக்கப்பட்டுள்ளது. பிஜி க்யூட் தேர்வு எழுதி புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் அளவுகோலின்படி தகுதி பெற்றவர்கள் வரும் 15ம் தேதி மாலை 5 மணி வரை விண்ணப்பிக்கலாம். இந்த கல்வி ஆண்டு முதல் புதுவை பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்.சி. ஜியோ பிசிக்ஸ் பாடப்பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய தேர்வு முகமை நடத்திய பிஜி- க்யூட் தேர்வு தாள் (PGQP08) எழுதி தேர்வானவர்கள் இப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம். https://www.pondiuni.edu.in/admissions-2022-23/. என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

புதுவை பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டில் தகுதி அளவுகோல் மற்றும் விருப்பப் படிப்புக்கான தேர்வு குறியீடு உள்ளிட்ட தகவல்கள் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும், சமீபத்திய தகவல்களுக்கு மாணவர்கள் பல்கலைக் கழக இணையதளத்தை தவறாமல் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுவதாக தெரிவித்துள்ளார்.

DINAKARAN

6 OCT 2022

PAGE 15

புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுகலை படிப்புக்கான சேர்க்கைக்கு 15ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, **அக். 6:** பிஜி-க்யூட் தேர்வு எழுதியவர்கள் புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு முதுகலை மற்றும் பிஜி டிப்ளமோ படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு வரும் 15ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இதுதொடர்பாக புதுவை பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

2022-23ம் கல்வி ஆண்டுக்கு புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு முதுகலை மற்றும் பிஜி டிப்ளமோ படிப்புகளுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான வெப் போர்ட்டல் திறக்கப்பட்டுள்ளது. பிஜி க்யூட் தேர்வு எழுதி புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் அளவுகோலின்படி தகுதி பெற்றவர்கள் வரும் 15ம் தேதி மாலை 5 மணி வரை விண்ணப்பிக்கலாம்.

இந்த கல்வி ஆண்டு முதல் புதுவை பல்கலைக்கழகத்தில் எம்எஸ்சி ஜியோபிசிக்ஸ் பாடப்பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய தேர்வு முகமை நடத்திய பிஜி-க்யூட் தேர்வு தாள் (PGQP08) எழுதி தேர்வானவர்கள் இப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம். *https://www.pondiuni.edu.in/admissions-2022-23/*. என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். புதுவை பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டில் தகுதி அளவுகோல் மற்றும் விருப்பப் படிப்புக்கான தேர்வு குறியீடு உள்ளிட்ட தகவல்கள் பார்த்து தெரிந்து கொள்ளலாம். மேலும், சமீபத்திய தகவல்களுக்கு மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINAMALAR

6 OCT 2022

PAGE 3

# முதுநிலை படிப்புகளில் சேர இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

## புதுச்சேரி பல்கலைக்கழகம் அறிவிப்பு

**புதுச்சேரி, அக். 6–** 'கியூட்' தேர்வில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகள் புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் முதுநிலை பட்டம் மற்றும் டிப்ளமோ படிப்புகளில் சேர, இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

மத்திய பல்கலைக் கழகங்களில் சேருவதற்காக 'கியூட்' நுழைவுத் தேர்வு ஜூலை 15ம் தேதி முதல் ஆக.30ம் தேதி வரை நடந்தது. இதற்கான ரிசல்ட் சமீபத்தில் வெளியானது.

இதனை தொடர்ந்து மாணவர் சேர்க்கை நடைமுறையை புதுச்சேரி பல்கலைக்கழகம் துவங்கியுள்ளது.

இதுகுறித்து பல்கலைக் கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு முதுநிலை பட்டம் மற்றும் முதுநிலை டிப்ளமோ படிப்புகளுக்கு ஆன்–லைன் மூலம் விண்ணப்பம் வழங்கப்படுகிறது. 'கியூட்' தேர்வு எழுதிய பட்டதாரிகள் வரும் 15ம் தேதி மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்கலாம்.

எம்.எஸ்சி., ஜியோபிசிக்ஸ் என்ற புதிய படிப்பினை இந்தாண்டு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இப்படிப்பிற்கு பி.ஜி.கியூ.பி08 என்ற கியூட் தேர்வினை எழுதிய பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தினை www.pondiuni.edu.in/admissions-– 2022 – 23 என்ற இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு படிப்பிற்கான தகுதிகள் பல்கலைக்கழக தகவல் குறிப்பேட்டில் இடம் பெற்றுள்ளது

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.